அரசாங்க நிருவாகச் சுற்றுநிருபம் இல. 197 (1/1).

எனது இல. கே/ப் 02/9/19.
தாபனப் பகுதி,
அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
1982, மே மாதம் 05 ஆந் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களங்களின் தலைவர்கள் யாவருக்கும்.

அரசாங்க சேவைகளில் சம்பளமறுசீரமைப்பு
சட்டகை அறிவித்தல்.

1981.12.29ந் திகதிய 197ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றுநிருபத்தின் 4 (XXI) ஆம் பந்தியின் பிரகாரம், தாபனக் கோவையின் XIX ஆம் அத்தியாயம் 5ஆம் பிரிவை நீக்கிப் பின்வருவனவற்றைப் புகுத்துவதன் மூலம் திருத்தப்பட்டுள்ளது. அரசாங்க சேவையின் சட்டகை 1982, சனவரி 01ந் திகதி தொடக்கம் பின்வருமாறு அறிவிடப்படுதல் வேண்டும். (அந்தப் பந்தியில் "சட்டகையற்ற" என்ற சொல்லுக்குப் பதிலாக "பட்டோலைப்படுத்தப்பட்ட" என்ற சொற்களை சேர்க்கப்படவேண்டுமெனக் கவனிக்க.)

5. சட்டகை

5.1 பின்வரும் உப பிரிவுகளில் குறிப்பிட்டுள்ளபடி, அரசாங்க சேவையிற் குவிருக்கும் உத்தியோகத்தர்களின் புதிய திட்டவுரு வேதனத்திலிருந்து, சட்டகை அறவிடப்படும். — புதிய திட்டவுரு வேதனங்கள்.

5.2 பட்டோலைப்படுத்தப்பட்ட சேவைகளுக்கு உள்ளீர்த்தல் உத்தி வேலைகள்.

5.2.1 லிகிதசேவை உத்தியோகத்தரின் புதிய திட்டவுரு வேதனத்திலிருந்து 10 (பத்து) சதவீதம், லிகிதசேவை காவலாளரின் புதிய திட்டவுரு வேதனத்திலிருந்து 6 (ஆறு) சதவீதம். — திறந்த சேவைகள்.

5.2.2 லிகிதசேவை அல்லது லிகிதசேவை உத்தியோகத்தர்-வகுப்பு. — அமைச்சு நிரந்தர சேவைகள்.

5.2.3 கடமைகள் போன்ற தற்காலிக சேவைகள்:- அறவிடுதல் இல்லை. — தற்காலிக சேவைகள்.

5:2:4 வசிப்பவர்கள் ஒவ்வொருவரிடமிருந்து சமபாகங்கான பொருளாதார வாடகை. — உடனுறை இடங்கள்

5:3. <u>பட்டோலைப்படுத்தப்பட்ட மனைகளுக்குரித்துடைய உத்தியோகத்தர்கள்.</u>

5:3:1 விவாகமான உத்தியோகத்தராயின் புதிய திரட்டிய வேதனத்தில் 8 (எட்டு) சதவீதம். விவாகமாகாதவராயின் புதிய திரட்டிய வேதனத்தில் 4 (நான்கு) சதவீதம்.

5:3:2 அரசாங்க மனைவழங்கப்படுதலுக்குப் பதிலாக ஒரு உத்தியோகத்தருக்கு விசேட வாடகைப்படி கொடுக்கப்பட்டு அல்லது வீட்டு வாடகையாகச் செலவு செய்த பணத்தைக் கொடுக்கப்பட்டிருப்பின் உப பிரிவு 5:3:1 இன் கீழ் அறவிடுதல் செய்யப்படும்.

5:3:3 அவ்வாறின, உத்தியோகத்தர் மனைப் பெறுதலை அல்லது உபபிரிவு 5:3:2இல் கூறப்பட்ட விசேட வாடகைப்படி பெறுதலைக் கைவிட்டு தனது புதிய திரட்டிய வேதனத்தை முழுமையாகப் பெறலாம். — விருப்புரிமை உபயோகித்தல்.

5:4 <u>அரசாங்க மனைகளில் கணவனும் மனைவியுமான இரு அரசாங்க உத்தியோகத்தர்கள் வசிப்பின்:-</u> — கணவன் மனைவி.

பட்டோலைப்படுத்தப்பட்ட மனைகளுக்கு உரித்தற்றவராயின், அவ்விருவரில் உயர்ந்த படியைப் பெறும் உத்தியோகத்தரின் சம்பளத்தில் 10 (பத்து) சதவீதமும் குறைந்த படியைப் பெறும் உத்தியோகத்தரின் புதிய திரட்டிய வேதனத்தில் 4 (நான்கு) சதவீதமும்.

5:4:1 அவர்களில் ஒருவர்/அல்லது இருவரும் பட்டோலைப் படுத்தப்பட்ட மனைகளுக்கு உரித்துடையவராயின் உயர்ந்த படியைப் பெறும் உத்தியோகத்தரின் புதிய திரட்டிய வேதனத்தில் 8 (எட்டு) சதவீதமும் குறைந்த படியைப் பெறும் உத்தியோகத்தரின் புதிய திரட்டிய வேதனத்தில் 2 (இரண்டு) சதவீதமும்.

5:5 <u>மனைகளைப் பங்கிட்டு வசிக்கும் உத்தியோகத்தர்கள்.</u> — மனைகளில் பங்காகக் குடியிருத்த

மனைகள் ஒதுக்கும் அதிகாரியின் விருப்பின் பேரில் இரண்டு அல்லது மேற்பட்ட உத்தியோகத்தர்களுக்கு மனைகளைப் பங்கிட்டு வசிப்பதற்கு அனுமதி வழங்கப் படலாம். வாடகை பின்வரும் அடிப்படையில் அறவிடப் படும்:

6...

5:5:1 மனைகளைப் பங்கிட்டு வசிக்கும் ஒவ்வொரு உத்தியோகத்தரின் புதிய திரட்டிய வேதனத்தில் 8 (எட்டு) சதவீதம். பொருத்தமானவிடத்து 5:2:1 ஆம் அல்லது 5:3:1 ஆம் உப பிரிவின் கீழ் பிரதம குடியிருப்பாளரிடமிருந்து அறவிடுதல் செய்யப்படுதல் வேண்டும்.

5:6 <u>பொருளாதார வாடகை</u>. ஒரு உத்தியோகத்தருக்கு ஒதுக்கப்பட்ட மனையின் நியாயமான பொருளாதார வாடகையிலும் பார்க்க அவரின் சம்பளத்திலிருந்து கழிக்கப்படும் தொகை கணிசமான அளவு அதிகரிப்பின் உத்தியோகத்தரின் சம்பளத்தின் ஒரு சதவீதப் பகுதியை அறவிடுதலிலும் பார்க்க ஒரு நிலையான வாடகைப் பணத்தை அறவிடுதற்குச் செயலாளரின் அனுமதி பெறப்படுதல் வேண்டும். மனையின் ஒரு பகுதி பொதுத் தேவைக்காகப் பிரயோகிக்கப்படின் அதற்கான வாடகைக் குறைப்புச் செய்வதற்குச் செயலாளரின் அனுமதி பெறப்படுதல் வேண்டும். இவ்வாறான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பிரதம மதிப்பீட்டாளரின் அறிக்கை, வாடகை தீர்மானிக்கப்படமுன் பெறப்படுதல் வேண்டும்.

பிரதம மதிப்பீட்டாளரின் அறிக்கை.

5:7 <u>பதவியொன்றிற்கு இணைக்கப்பட்ட மனையில் வசிப்பதற்கு மறுத்தல்</u>. ஒரு பதவிக்கு இணைக்கப்பட்ட மனையில் ஒரு உத்தியோகத்தர் குடியிருக்க மறுத்தால், ஒதுக்கும் அதிகாரி இன்னொருவர் அம் மனையிற் குடியிருப்பதற்கு அனுமதித்தாலன்றி மேற்கூறப்பட்ட உத்தியோகத்தர் அம்மனையில் இருப்பதாகக் கருதி வாடகை அறவிடப்படும். அச்சந்தர்ப்பத்தில் பதவியுடன் இணைக்கப்பட்ட மனைக்குரிய பதவி வகிப்பவரினால் கொடுக்கப்படும் வாடகை அல்லது அங்கு உண்மையாக வசிப்பவரினால் கொடுக்கப்பட வேண்டிய வாடகை ஆகிய இரண்டினுள் எது கூடியதோ அத் தொகையே அறவிடப்பட வேண்டிய தொகையாகும்.

மனைகளிற் குடியிருக்கத் தவறின் வாடகை செலுத்த நேரிடும்.

5:8 <u>நீர் பாவிப்பதற்கான கொடுப்பனவு</u>. நீர் பாவிப்பதற்காக வேண்டி கட்டணங்களைச் செலுத்துவதற்கு உத்தியோகத்தரே பொறுப்பாவார்.

/ 7...

5:9 <u>மின்சக்திக்கும் வாயுவிற்குமான கொடுப்பனவு</u>. மின்சக்தி அல்லது வாயு உபயோகிப்பதற்கான கொடுப்பனவை உத்தியோகத்தரே செலுத்தல் வேண்டும்.

௨. தாபனக் கோவைக்கான பொருத்தமான திருத்தங்கள் காலகதியிற் செய்யப்படும்.

ஒப்பமிட்டவர்: டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்த்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.